12.05.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## நத்தத்திலும் விளையுது குளிர் பிரதேச 'ஸ்டார் புரூட்'




திண்டுக்கல்: குளிர் பிரதேசத்தில் விளையும், உடல் கொழுப்பை குறைக்க வல்ல 'ஸ்டார் புரூட்' நத்தத்திலும் விளைவிக்கப்படுகிறது. கொடைக்கானல், ஊட்டி போன்ற குளிர் பிரதேசங்களில் விளையும் 'ஸ்டார் புரூட்' நத்தம் மூங்கில்பட்டி பண்ணையிலும் விளைவிக்கப்படுகிறது. இப்பழம் இனிப்பு, துவர்ப்பு, புளிப்பு உட்பட 5 சுவைகள் உடையது. உடலில் உள்ள கெட்ட கொழுப்பை குறைத்து, நல்ல கொழுப்பை அதிகரிக்கச் செய்கிறது. 'மனோரஞ்சிதம்' என்றும் தமிழில் அழைக்கப்படுகிறது. முழுக்க, முழுக்க மாட்டு சாணம், மண்புழு உரம், மக்கிய காய்கறி தாவர இலைகள் உரமாக இடப்படுகிறது. இதில் பூச்சி தாக்குதலும் இருக்காது.

**விவசாயி ஆனந்தவேல் கூறியதாவது:** குற்றலாம் உட்பட குளிர் பிரதேசங்களில் விளையும் 'ஸ்டார் புரூட்', நத்தத்திலும் விளைவிப்பதற்காக, கேரளாவில் செடியாக வாங்கி வந்தேன். இதற்கென சீசன் கிடையாது. அனைத்து மாதங்களிலும் காய்க்கக் கூடியது. மார்க்கெட்டில் ஒரு பழம் ரூ.10க்கு விற்கிறது. உடலுக்கு தேவையான அனைத்து சத்துக்களும் 'ஸ்டார் புரூட்'டில் நிறைந்துள்ளன. இவரை 98944 88884ல் தொடர்பு கொள்ளலாம்.

## ஆலங்கட்டி மழையால் பாதிப்பு: உச்சத்தில் மல்லி இலை விலை

பெங்களூரு: கர்நாடகா மாநிலத்தின் வெவ்வேறு மாவட்டங்களில் பெய்த ஆலங்கட்டி மழையால், காய்கறி விளைச்சல் பாதிக்கப்பட்டு, அனைத்து காய்கறி, கீரை வகைகள் விலை, 'கிடுகிடு'வென உயர்ந்து வருகிறது. கடந்த வாரம், அதிக காற்றுடன் கூடிய ஆலங்கட்டி மழை பெய்ததால், அறுவடைக்கு தயாராக இருந்த பயிர்கள் சேதமடைந்தன. தேவைக்கு தகுந்தபடி காய்கறிகள் சப்ளை ஆகாததால், விலை உயர்ந்து வருகிறது. கடந்த சில வாரங்களுக்கு முன், கொத்தமல்லியின் விலை குறைந்திருந்த நிலையில் தற்போது, மீண்டும் இதன் விலை உயர்ந்துள்ளது. தக்காளி, வெந்தயக்கீரை, பாலக்கீரை, பீன்ஸ், வெண்டைக்காய், முட்டைக்கோஸ், பட்டாணி உட்பட பெரும்பாலான காய்கறிகள், கீரைகளின் விலையும் தொடர்ந்து உயர்ந்து வருகின்றன. ஹாப்காம்சில், பண்ணை கொத்தமல்லி கீரை, கிலோவுக்கு, 68 ரூபாயாகவும்; நாட்டு கொத்தமல்லி கீரை, 30 - 40 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. வெந்தயக்கீரை, கிலோ, 86 ரூபாயாக உயர்ந்துள்ளது. வெவ்வேறு பழங்களின் விலை உயர்ந்திருந்தாலும், கடந்த ஆறேழு மாதங்களுக்கு முன் உயர்ந்திருந்த வாழைப்பழம் விலை, தற்போது குறைந்துள்ளது. ஏலக்கி வாழை, கிலோ, 33 ரூபாயாகவும்; பச்சை வாழை, 12; ரஸ்தாலி வாழை, 32 ரூபாயாகவும் உள்ளது.

## பொன்னேரியில் மீன்வள கல்லூரி

சென்னை: 'பிளஸ் 2 முடித்தோர், பொன்னேரி மீன்வளக் கல்லூரியில், இளங்கலை மீன்வளப் பட்டப்படிப்பு - பி.எப்.எஸ்.ஐ.,யில் சேரலாம்;

ஆராய்ச்சிக்கான சிறந்த கட்டமைப்பு வசதிகளும் உள்ளதாக, கல்லூரி முதல்வர் தெரிவித்து உள்ளார். தமிழ்நாடு மீன்வளப் பல்கலையின் கீழ், பொன்னேரியில் மீன்வளக் கல்லூரி உள்ளது; இங்கு பி.எப்.எஸ்.சி., எனப்படும், இளங்கலை மீன்வளம் என்ற பட்டப்படிப்பு உள்ளது; இதில், ஆண்டுதோறும், 20 மாணவர் சேர்க்கப்படுகின்றனர்.

இதுகுறித்து, கல்லூரி முதல்வர் வெளியிட்டுள்ள அறிவிப்பு: மீன்வளம் படிப்போர், மீன்வளத் துறையில் மீன்வள ஆய்வாளர், மீன்வள சார் - ஆய்வாளர் பணிகளில் சேரலாம்; மீன் மற்றும் இறால் பண்ணை நிர்வகித்தல் மற்றும் சுய தொழிலும் ஈடுபடலாம். கல்லூரி, சென்னை அருகே அமைந்துள்ளது. பழவேற்காடு ஏரி, 15 கி.மீ., துாரத்தில் உள்ளது; இதனால், நன்னீர், உவர்நீர் சார்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ள உகந்த இடமாக அமையும்; சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளும் உள்ளன. மீன்வளப் படிப்புக்கான விண்ணப்பங்கள், மே 15ம் தேதிக்கு மேல் வழங்கப்படும். இதுபற்றிய விவரங்களை, www.tnfu.ac.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு, அவர் தெரிவித்து உள்ளார். இந்த கல்லூரியில், முதுநிலை மீன்வளப்படிப்பான, எம்.எப்.எஸ்.சி.,யும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**வால்பாறையில் தொடர் மழை**

வால்பாறை: கோடை மழையால், வால்பாறையில் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். கோவை மாவட்டம், வால்பாறைக்கு, கோடையில் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வந்து செல்கின்றனர். வால்பாறையில், கோடை மழை பரவலாக பெய்வதால், பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அணைகளுக்கு, தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. சோலையாறு அணைப்பகுதியில், 6 செ.மீ., மழை பெய்துள்ளது.

**தொடர் மழை எதிரொலி: உப்பு விலை உயர்கிறது**

தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்டத்தில், பருவம் தவறி, தொடர்ந்து மழை பெய்வதால், உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. உப்பு இருப்பு இல்லாததால், விலை உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.
தூத்துக்குடி மாவட்டத்தில், உப்பு உற்பத்தி, முக்கிய தொழிலாக உள்ளது. மாநிலத்தில் உற்பத்தியாகும் உப்பில், 70 சதவீதம், தூத்துக்குடியில் உற்பத்தியாகிறது. ஆண்டுக்கு, 25 லட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. கோடை காலமான, பிப்., முதல், உப்பு உற்பத்தி சீசன் துவங்கும். மார்ச், ஏப்., மே மாதங்களில் உற்பத்தி அதிகரிக்கும்.

**மழையால் பாதிப்பு:**

கோடை காலமான தற்போது, தொடர்ந்து மழை பெய்கிறது. உப்பளங்கள் அனைத்தும் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இதனால், உப்பு உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆண்டுக்கு, 25 லட்சம் டன் உற்பத்தி என்பது, இந்த ஆண்டு, 15 லட்சம் டன் தான் உப்பு உற்பத்தி இருக்கும் என, எதிர்பார்க்கப்பட்டது. தற்போது மீண்டும் மழை பெய்து வருவதால், உப்பு உற்பத்தி முழுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. பொதுவாக, மழை காலங்களில், உப்பு வியாபாரிகள், இருப்பு வைத்திருப்பர். தற்போது, சீசன் நேரம் என்பதால், உப்பு இருப்பு வைக்கவில்லை. இதனால், உப்பிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, டன், 800 ரூபாயில் இருந்து, 1,400 ரூபாயாக உயர்ந்துள்ளது. இந்த விலை மேலும் உயரும் என, உப்பு வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.
**வீரபாண்டியில் கொட்டித்தீர்த்தது மழை: பெரியாறு அணையில் மழை குறைவு**மதுரை: தேனி மாவட்டம் வீரபாண்டியில் நேற்று முன்தினம் மழை கொட்டித்தீர்த்தது. அங்கு 76 மி.மீ., மழை பதிவானது. எனினும் பெரியாறு அணையில் 1 மி.மீ., மழையே பதிவானது.

மதுரை, திண்டுக்கல், தேனியில் தொடர்ந்து கோடை மழை பெய்து வருவதால் பெரியாறு, வைகை, சோத்துப்பாறை, மஞ்சளாறு, சாத்தையாறு, சண்முகாநதி அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

தேனி மாவட்டம் வீரபாண்டியில் நேற்று முன்தினம் மழை கொட்டித்தீர்த்தது. அதிகபட்சமாக 76 மி.மீ., மழை பதிவானது. பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லை. 1 மீ.மீ., மட்டுமே மழை பதிவானது. மதுரை சாத்தையாறு அணை பகுதியில் நேற்று முன்தினம் 25 மி.மீ., தேக்கடி 05.05, கூடலூர் 19.05, உத்தமபாளையம் 10, வைகை அணை 07.04, மஞ்சளாறு 17, மருதாநதி 20, சோத்துப்பாறை 06, பேரணை 35, குப்பணம்ப்பட்டி 10, ஆண்டிப்பட்டி 31, மேட்டுப்பட்டி 15, கள்ளந்திரி 15, புளிப்பட்டி 02.04, இடையபட்டி 03, விரகனூர் 08.03, கொடைக்கானல் 04 என மழை பதிவானது. வைகை நீர்மட்டம் உயர்வு: பெரியாறு அணை நீர் வரத்து 358 கன அடி. வெளியேற்றம் 150 கன அடி. வைகை அணை வரத்து 210 கன அடி. வெளியேற்றம் 60 கன அடி. சோத்துப்பாறை அணை நீர் வரத்து 10 கன அடி. வெளியேற்றம் 10 கன அடி. மஞ்சளாறு அணை நீர் வரத்து 82 கன அடி வெளியேற்றம் இல்லை. **அணைகளின் நீர்மட்டம் (நேற்றைய நிலவரம்)**பெரியாறு : 115.30 அடி (மொத்தம் 142)வைகை : 37.01 (71.07)சோத்துப்பாறை : 126 (126)மஞ்சளாறு : 41.70 (70)சண்முகாநதி : 26.25 (52) சாத்தையாறு : 12.70 (29)

**திண்டுக்கல்லில் பந்தல் இல்லா பாகற்காய்**




திண்டுக்கல்: திண்டுக்கல்லில் புதிய தொழில்நுட்பத்தில் பந்தல் அமைக்காமல் குறைந்த செலவில் பாகற்காய் சாகுபடி செய்யப்படுகிறது.

பாகற்காய் சாகுபடி செய்ய பந்தல் அமைக்க வேண்டும். ஏக்கருக்கு 100 கல்தூண்கள் ஊன்றி குறுக்கும், நெடுக்குமாக கம்பி வலையை இணைத்து பந்தல் அமைக்க வேண்டும். இதற்கு செலவு அதிகமாகும். இதனை

குறைக்க புதிய தொழில்நுட்பத்தில் திண்டுக்கல் ரெட்டியார்சத்திரம் காய்கறி மகத்துவ மையத்தில் கால் ஏக்கரில் பந்தல் இன்றி பாகற்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு பாத்திக்கும் 2 இரும்பு குழாய்களை ஊன்றி கட்டு கம்பிகள் மூலம் இணைத்துள்ளனர்.ஒவ்வொரு பாத்திக்கும் போதிய இடைவெளி இருப்பதால் காய்களை பறிப்பது எளிது. நீர் பாய்ச்சுவதும் எளிது.**மைய மேலாளர் பெருமாள் கூறியதாவது:** இஸ்ரேல் தொழில்நுட்பத்தில் பாத்திகள் அமைக்கப்பட்டு 'மல்சிங் சீட்' மூலம் மூடப்படும். 'சீட்' இடைவெளியில் விதைகள் ஊன்றப்படும். இதனால் களைகள் வளராது. இந்த தொழில்நுட்பத்தில் இதுவரை மிளகாய், தக்காளி, வெண்டை சாகுபடி செய்தோம். முதல்முறையாக பாகற்காய் சாகுபடி செய்துள்ளோம். மேலும் பந்தல் செலவை குறைக்க மற்றொரு தொழில்நுட்பத்தை பயன்படுத்தியுள்ளோம். சாதாரணமாக ஏக்கருக்கு பந்தல் அமைக்க ரூ.1.2 லட்சம் செலவாகும். புதிய முறையில் ரூ.10 ஆயிரம் போதும். செடிகளுக்கு தேவையான நீரும், சத்துக்களும் சீராக கிடைப்பதால் காய்கள் பெரிதாக இருக்கும். ஏக்கருக்கு 12 டன்னுக்கு அதிகமாக கிடைக்கும், என்றார்.

**விவசாய நிலத்தில் காட்டு பன்றிகள்: தடுக்க பயோ கெமிக்கல் கண்டுபிடிப்பு**

வேலூர்: விவசாய நிலத்துக்குள், காட்டு பன்றிகளை வரவிடாமல் தடுக்க, பயோ கெமிக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் காட்டுப்பன்றிகள் மற்றும் யானைகள், விவசாய நிலங்களுக்குள் அடிக்கடி புகுந்து, பயிர்களை நாசம் செய்து வருவதால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதைத் தடுக்க, விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து, விவசாய நிலத்துக்குள் காட்டுப் பன்றிகளை, வரவிடாமல் தடுக்கும் வகையில், பயோ கெமிக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, வேலூர், விரிஞ்சிபுரம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக ஆராய்ச்சி மைய பேராசிரியர் எம்.பாண்டியன் கூறியதாவது: காட்டுப் பன்றிகள் விவசாய நிலங்களுக்குள் வராமல்

தடுக்கும் வகையில், பயோ கெமிக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதை, சின்ன சின்ன பாட்டில்களில் ஊற்றி, வனப்பகுதி கிராமங்களில் உள்ள மரங்களில் தொங்க விட வேண்டும். பயோ கெமிக்கல் வாசனை, காட்டுப் பன்றிகளுக்கு பிடிக்காது. அதை நுகரும் காட்டு பன்றிகள், அந்த பகுதிக்குள் நுழையாது. பயோ கெமிக்கல் பயன்படுத்துவது தொடர்பாக, விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி வருகிறோம். இதைத்தொடர்ந்து, 10 விவசாயிகள், பயோ கெமிக்கல் அடங்கிய பாட்டில்களை, ஆங்காங்கே கட்டித் தொங்க விடுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சோதனை முடிவை அறிந்து, தமிழகம் முழுவதும் காட்டுப் பன்றிகளை விரட்ட, பயோ கெமிக்கலை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு, பாண்டியன் கூறினார்.

**விலங்குகளுக்கு ஆபத்து வராது:**

இதுதொடர்பாக, ஆம்பூர் வனச்சரக அலுவலர் ராஜ்குமார் கூறியதாவது: காட்டுப் பன்றிகளை விரட்டும், பயோ கெமிக்கல் அறிமுக கூட்டத்தில், வனத்துறையினரும் பங்கேற்று, விளக்கத்தை கேட்டு அறிந்தோம். இந்த பயோ கெமிக்கலால் காட்டு விலங்குகளுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுமா? என்று கேட்டோம். அதற்கு, இது, உணவுப்பொருட்கள் அடங்கியது. அதனால், விலங்குகளுக்கு எந்த ஆபத்தும் வராது என்று பேராசிரியர்கள் தெரிவித்தனர். உயர் அதிகாரிகளின் அனுமதியோடு, அந்த பயோ கெமிக்கலை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திடம் இருந்து வாங்கியோ அல்லது தயாரிக்கும் முறையை கேட்டறிந்தோ, காட்டுப் பன்றிகள் விவசாய நிலங்களுக்குள் வராமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு, அவர் கூறினார்.

**அமோகம் ! : சோளப் பயிர் விளைச்சல்... : கள்ளக்குறிச்சி விவசாயிகள் மகிழ்ச்சி**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதி விவசாய நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட சோள பயிர்கள் செழித்து வளர்ந்து, அறுவடைக்கு தயாராக உள்ளது. விளைச்சல் அதிகரித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கள்ளக்குறிச்சி அடுத்த பெரியசிறுவத்தூர், எரவார்,

புக்கிரவாரி உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள், சோளம் பயிரிட்டுள்ளனர். தற்போது செழிப்புடன் வளர்ந்து சோள கதிர்கள் முற்றி, அறுவடைக்கு தயாராக உள்ளது. ஆறு மாத கால பயிரான இது, கடும் கோடையிலும் தண்ணீரின்றி வளரும் தன்மை கொண்டது, விதைக்கும் காலத்தில் தண்ணீர் பாய்ச்சினால் மட்டும் போதும், விதைப்பிற்கு பின் ஒரு மாத காலத்தில் களை எடுக்க வேண்டும். இதுபோன்ற பராமரிப்பு பணி குறைவு காரணமாக, இப்பகுதி விவசாயிகள் அதிகளவில் சோளம் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கோதுமை, அரிசிக்கு அடுத்தாற்போல் பொதுமக்கள் அதிகளவில் உணவாக பயன்படும் சோளப்பயிர்கள் மிகுந்த மருத்துவ குணம் கொண்டது. நீரிழிவு, செரிமான குறைபாடுகள், ரத்த சோகையை போக்கும் தன்மை இந்த சோளத்திற்கு உண்டு. கண் குறைபாடுகளை போக்கும் பீட்டா கரோட்டின் சக்தி இதில் அதிகளவில் உள்ளது. மேலும் இவைகள் கால்நடை உணவாகவும், தொழிற்சாலைகளில் மூலப்பொருளாகவும் பன்முக பயன்பாடுகள் கொண்டது. இந்த சோளப்பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளதால், எதிர்பார்த்ததைவிட கூடுதல் மகசூல் கிடைக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சோளப் பயிர்கள் சாகுபடி செய்த கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**திண்டிவனத்தில் திடீர் மழை பொது மக்கள் மகிழ்சி**

திண்டிவனம்: திண்டிவனத்தில் நேற்று திடீரென மழை பெய்ததால், மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். திண்டிவனம் பகுதியில் அக்னி நட்சத்திரம் காரணமாக கடும் வெயிலை சமாளிக்க முடியாமல் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் திண்டிவம் பகுதியில் அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில் நேற்று காலை 8:15 மணி முதல் 8: 40 மணி வரை திடீரென மழை பெய்தது. இதனால் பூமி குளிர்ந்தது. சீதோஷ்ண நிலை மாறி மேகமூட்டத்துடன் இருந்தது. திண்டிவனம் நகரில் வெயிலின் தாக்கம் குறைந்ததால், பொது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## பரவலாக மழை பதிவு

கோபி: கோபி டவுன் மற்றும் சுற்று பகுதியில், நேற்று அதிகாலை முதல், வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. காலை, 7 மணிக்கு லேசான தூரலுடன் மழை பொழிந்தது. இதற்கிடையே நேற்று மதியம், 2.30 மணியளவில், பலத்த காற்றுடன் கனமான மழை பெய்தது. இதனால் டவுன் பகுதியில் ஆங்காங்கே லேசாக தண்ணீர் தேங்கி நின்றது. இதேபோல, ஈரோடு உட்பட பல பகுதிகளில் லேசான மழை பதிவானது.

## ஊட்டி மலர் கண்காட்சியை பிரம்மாண்டமாக நடத்த திட்டம்

ஊட்டி : சொத்து குவிப்பு வழக்கில், ஜெ., விடுதலையானதை தொடர்ந்து, ஊட்டி மலர் கண்காட்சியை, பிரம்மாண்டமாக நடத்த, நீலகிரி மாவட்ட நிர்வாகம் திட்டமிட்டு உள்ளது.

நீலகிரி மாவட்டம், ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில், வரும் 15, 16, 17 ஆகிய தேதிகளில், மலர் கண்காட்சி நடத்தப்பட உள்ளது. சொத்து குவிப்பு வழக்கில், ஜெயலலிதா விடுவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, இதை விமரிசையாக நடத்த, மாவட்ட நிர்வாகம் திட்டமிட்டு உள்ளது. தோட்டக்கலை வட்டாரங்கள் கூறுகையில், 'மலர் அலங்கார வடிவமைப்பு செய்வது, அழைப்பிதழ் அச்சடிப்பதில், மாற்றங்கள் செய்ய வேண்டி இருக்கும் என்பதால், நிகழ்ச்சி எதுவும் இறுதி செய்யப்படவில்லை' என்றனர்.

## கத்திரி வெயில் துவங்கிய பின் தஞ்சையில் 213 மி.மீ., மழை

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில், கத்திரி வெயில் துவங்கியது முதல் பொதுமக்களை கோடை வெயில் வாட்டி வதைக்கிறது. இதனால், பகல் நேரங்களில் மக்கள் நடமாட்டம் வெகுவாக குறைந்தது. மேலும், இளநீர், குளர்பான கடைகளில் கூட்டம் அலைமோதியது. இந்நிலையில், நேற்று அதிகாலை முதல் மாவட்ட முழுவதும் இடி, மின்னலுடன் கூடிய சாரல் மழை பெய்தது. மேலும், மாவட்டத்தின் கடலோர பகுதிகளில் ஓரளவு பலத்த மழை பெய்துள்ளது. மாவட்டத்தில், நேற்று மாலை, 4 மணி வரை பதிவான மழை விபரம்:

தஞ்சையில், 11.40, வல்லத்தில், 3.50, குருங்குளத்தில், 23.40 பூதலூரில், 3.20, திருவையாறில், 8, திருக்காட்டுப்பள்ளியில், 3, பாபநாசத்தில், 1, அய்யம்பேட்டையில், 2, பட்டுக்கோட்டையில், 44, அதிரம்பாட்டினத்தில், 36.50, ஈசன்விடுதியில், 34.20, மதுக்கூரில், 14.80, பேராவூரணியில், 28, என, மாவட்டத்தில் மொத்தம், 213 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

## கொடைக்கானலில் மழை பழநி அணைகளுக்கு நீர்வரத்து

பழநி: கொடைக்கானல் மலைப்பகுதியில் சிலநாட்களாக பெய்துவரும் மழையால் பழநி வரதமாநதி, குதிரையாறு, பாலாறு-பொருந்தலாறு அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. கொடைக்கானல் மலைபகுதியில் சிலநாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதன்காரணமாக பழநியின் குடிநீர், விவசாய ஆதாரமான வரதமாநதி, குதிரையாறு, பாலாறு-பொருந்தலாறு அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. குறைந்திருந்த நீர்மட்டம் உயரத்துவங்கியுள்ளது.

நேற்றைய நிலவரப்படி வரதமாநதி அணைக்கு வினாடிக்கு 10 கனஅடி நீர்வரத்து உள்ளது. வினாடிக்கு 2 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 54.07 அடி (மொத்தம் 67அடி)யாக உள்ளது. குதிரையாறு அணைக்கு வினாடிக்கு 1 கன அடி நீர்வரத்து உள்ளது. வினாடிக்கு 3 கன அடி நீர்வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 45.87 அடி (மொத்தம் 80 அடி)யாக உள்ளது. பாலாறு பொருந்தலாறு அணைக்கு வினாடிக்கு 4 கனஅடி நீர்வரத்து உள்ளது. வினாடிக்கு 12 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 31 அடி(மொத்தம் 65அடி)யாக உள்ளது. பரவலாக மழைபெய்தும் நிலத்தடிநீர்மட்டம் உயரத்துவங்கியுள்ளதால் பம்புசெட் மூலம் அணைப்பகுதியை ஒட்டியுள்ள பகுதி விவசாயிகள் நெல் நடவுப்பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஒட்டன்சத்திரத்தில் முருங்கைக்காய் கிலோவுக்கு ரூ.8 உயர்வு

ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் முருங்கைக்காய் விலை, கிலோவிற்கு ரூ.8 அதிகரித்து ரூ.35 ஆக விற்றது. ஒட்டன்சத்திரம்,

மார்க்கம்பட்டி, இடையகோட்டை, கள்ளிமந்தையம், கரியாம்பட்டி மற்றும் தாராபுரம், மூலனூர் பகுதிகளில் முருங்கை அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக வரத்து அதிகமாக இருந்ததால் மார்க்கெட்டில் விலை இறங்குமுகமாக காணப்பட்டது. இந்நிலையில் திடீரென்று கோடை மழை தொடர்ச்சியாக பெய்ததால், செடிகளில் இருந்த முருங்கை பூக்கள் உதிர்ந்து விட்டன. இதனால் வரத்து குறைந்து, விலையும் ஏறுமுகமாக இருந்தது. நேற்று முன்தினம் ஒட்டன்சத்திரம் தாலுகாவின் பல இடங்களில் பெய்த பலத்த மழை பெய்தது.

அத்துடன், ஜெயலலிதா சொத்து குவிப்பு வழக்கின் தீர்ப்பு வெளியாவதையொட்டியும் வியாபாரிகள் வரமாட்டார்கள் என்று கருதிய விவசாயிகளில் பலர் மார்க்கெட்டுக்கு வரவில்லை. தீர்ப்பு வெளியான பின், போக்குவரத்து பிரச்னை எழாததால், வியாபாரிகள் வழக்கம் போல் மார்க்கெட்டிற்கு வந்தனர். அதேசமயம் அவர்களின் தேவைக்கேற்ப முருங்கைக்காய் இல்லாததால் நேற்று ஓரே நாளில் முருங்கை கிலோவுக்கு ரூ.8 அதிகரித்தது. இதனால் ரூ.27லிருந்து ரூ.35க்கு உயர்ந்தது. இன்று வழக்கம் போல் முருங்கை வரத்து இருந்தால் விலை குறையும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மீன் கண்ணில் புற்றுநோய் கட்டிகளை அகற்ற அறுவைச் சிகிச்சை!**



தங்கமீனின் கண்ணிலிருந்த புற்றுநோய் கட்டியை அறுவைச் சிகிச்சை மூலம் மருத்துவர்கள் அகற்றினர்.

பிரிட்டனில் இந்த அதிசய அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. பிரிஸ்டல் நகரில் ஒரு குடும்பத்தினர் மான்டி என்கிற தங்கமீனை வளர்த்தி வந்தனர். 5 வயதான இந்த மீனின் இடது கண்ணில் புற்றுநோய்க் கட்டிகள் இருப்பது தெரிய வந்தது. அது மீனின் முதுகுப் பகுதி வரை பரவியது.

இந்த நிலையில் மீனுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய மான்டியை வளர்த்த குடும்பத்தினர் முடிவு செய்தனர்.

பிரிஸ்டல் உயிரியல் பூங்கா அறுவைச் சிகிச்சை நிபுணர் மிஷெல் பேரோஸ் இந்த அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டார். அவருக்கு உதவியாக வேறு மருத்துவர்களும் இருந்தனர்.

இது குறித்து மருத்துவர் சோனியா மைல்ஸ் கூறியதாவது: மயக்க மருந்து கலந்த நீரில் தங்கமீனை வைத்து அறுவை சிகிச்சை நடைபெற்றது. 45 நிமிடங்கள் நடைபெற்ற அறுவைச் சிகிச்சையில் புற்றுநோய் கட்டிகள் அகற்றப்பட்டன. சிகிச்சையின்போது மான்டி நல்ல ஒத்துழைப்பு தந்தான். துரதிருஷ்டவசமாக மான்டி தனது இடது கண்ணை இழக்க வேண்டியதாகிவிட்டது. ஆனாலும் அவன் உயிர் பிழைத்துவிட்டான். எதுவுமே நடக்காதது போல, வளர்ப்பவர்கள் வீட்டில் இப்போது இருக்கிறான்.

தங்கமீன்களுக்கு நாங்கள் அறுவைச் சிகிச்சை செய்வது மிக அபூர்வமானது. ஆனால் பொதுவாகவே, மீன்களுக்கு அறுவைச் சிகிச்சை நடைபெறும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்றார்.

இந்த அறுவைச் சிகிச்சைக்கு கட்டணமாக 200 பவுண்டுகள் (சுமார் ரூ. 20 ஆயிரம்) பெறப்பட்டது.

## விலை உயர்வைக் கட்டுப்படுத்த பருப்பு வகைகள் இறக்குமதி: மத்திய அரசு தீவிர பரிசீலனை

வெளிச்சந்தையில் பருப்பு வகைகளின் விலைஉயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் துவரை, கடலை உள்ளிட்டவற்றை இறக்குமதி செய்வது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சக வட்டாரங்கள் திங்கள்கிழமை தெரிவித்தன.

இந்தியாவில் ஆண்டுதோறும் சராசரியாக 1.8 கோடி டன் அளவுக்கு பருப்பு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், தேவையைக் கருத்தில்கொண்டு 30-40 லட்சம் டன் அளவுக்கு இவை இறக்குமதியும் செய்யப்பட்டு வந்தன. கடந்த 2 ஆண்டுகளாக பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்படவில்லை.

இந்த நிலையில், பருப்பு வகைகளின் ஏற்றுமதியில் முன்னணி வகிக்கும் ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் நிகழாண்டில் உற்பத்தி வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் வெளியானதையடுத்து, வெளிச்சந்தையில் துவரை, உளுந்து உள்ளிட்டவற்றின் விலை கடந்த சில மாதங்களாக தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

தில்லியில் கடந்த ஜனவரி மாதம் ரூ.83-க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ துவரம் பருப்பு, தற்போது ரூ.108-க்கு விற்கப்படுகிறது. இதேபோல் ரூ.54 ஆக இருந்த ஒரு கிலோ கடலைப் பருப்பின் விலை தற்போது ரூ.68 ஆக உயர்ந்துள்ளது. இதுகுறித்து மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சக வட்டாரங்கள் கூறியதாவது:நிகழாண்டில் பருவமழை வழக்கத்தைவிடக் குறைவாகப் பெய்யும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் பருப்பு வகைகளின் உற்பத்தி வீழ்ச்சியடையும் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இவற்றின் விளைவாக துவரை, கடலை, உளுந்து உள்ளிட்டவற்றுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு, வெளிச்சந்தையில் இவற்றின் விலை உயரக்கூடும். இதனைக் கருத்தில் கொண்டு, உலோகம், கனிமங்கள் வர்த்தகக் கழகம் (எம்.எம்.டி.சி.) போன்ற பொதுத் துறை நிறுவனங்கள் மூலம், பருப்பு வகைகளை முன்கூட்டியே இறக்குமதி செய்வது குறித்து தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

**தமிழகம், புதுச்சேரியில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது:

தென்மேற்கு வங்கக் கடல், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மேலடுக்குச் சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக புதுச்சேரி, தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் செவ்வாய்க்கிழமை பலத்த மழை பெய்யும்.
திங்கள்கிழமை காலை வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பல்வேறு மாவட்டங்களில் மழை பதிவாகியுள்ளது. பட்டுக்கோட்டை, தூத்துக்குடி, அதிராமபட்டினம், கொல்லிமலை, தூத்துக்குடி துறைமுகம் ஆகிய இடங்களில் தலா 40 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.
இதேபோல வாடிபட்டி, கழுகுமலை, விளாத்திகுளம், திருப்பூர், ஒகேனக்கல், மணமேல்குடி, பேராவூரணி, சோழவந்தான் ஆகிய பகுதிகளில் தலா 30 மி.மீ. மழை பெய்துள்ளது.
சென்னை மாநகரைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் ஒரு சில பகுதிகளில் மழைபெய்யும். நகரின் அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 95,82 டிகிரிஃபாரன்ஹீட்டாகஇருக்கும். வெயில் குறைவு: திங்கள்கிழமையன்று வேலூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 95 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெயில் பதிவாகியுள்ளது. மற்ற மாவட்டங்களில் 95 டிகிரிக்கும் குறைவாகவே வெயில் பதிவாகியுள்ளது என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மானாமதுரை பகுதியில் சாரல் மழை**

மானாமதுரை பகுதியில் திங்கள்கிழமை பெய்த சாரல் மழையால் வெயிலின் கடுமை தணிந்தது.மானாமதுரை பகுதியில் கோடை காலம் தொடங்கியது முதல் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதிக்குள்ளாகினர்.இந்நிலையில் கடந்த 2 நாள்களாக இப்பகுதியில் வானத்தை கரு மேகங்கள் சூழ்ந்து குளிர்ந்த காற்று வீசியது.அவ்வப்போது சாரல் மழை பெய்தது. இந்நிலையில் திங்கள்கிழமை மதியம் மானாமதுரை பகுதியில் தொடர்ந்து பெய்த சாரல் மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

குளிர்ந்த காற்று, சாரல் மழை காரணமாக மானாமதுரை பகுதியில் வாட்டி வதைத்து வந்த வெயிலின் கடுமை தணிந்தது. சாரல் மழை இரவு வரை நீடித்தது.

### அருப்புக்கோட்டையில் தொடர்மழை

அருப்புக்கோட்டையில் கடந்த வாரம் வரை கடும் வெயிலும், வெப்பமும் வாட்டி வதைத்து வந்த நிலையில், வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.குறிப்பாக வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்குப் பிறகு நல்ல மழை பெய்தது. சனி, ஞாயிறு,திங்கள்கிழமைகளில் பிற்பகல் 4 மணிக்கு தொடர்ந்து நல்ல மழை பெய்து வருகிறது. சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுவதால் கண்மாய் உள்ளிட்ட நீர்நிலைகளில் சிறிதளவு தண்ணீர் சேர்ந்துள்ளது. இத்தொடர்மழையால் அருப்புக்கோட்டை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வெப்பம் தணிந்துள்ளது.

### மதுரை மார்க்கெட்டில் பூக்கள் விலை வீழ்ச்சி

மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டிற்கு நள்ளிரவு முதல் பூக்கள் வரத்து இருந்த போதிலும், சுற்றுவட்டார சிறு வியாபாரிகள் வராததால் பூக்கள் குறைந்த விலையில் திங்கள்கிழமை விற்கப்பட்டன.

மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டுக்கு சுற்றுவட்டாரத்திலுள்ள விவசாயிகள் நள்ளிரவு முதல் பூக்களை விற்பனைக்கு கொண்டு வருவர். அதேபோன்று சிறு வியாபாரிகளும் நள்ளிரவு முதல் குவிந்திருந்து பூக்களை வாங்கிச் செல்வர்.

பிப்ரவரி முதல் பூக்கள் வரத்து கணிசமாக இருந்து வந்தது. மே மாதம் கோடை வெயிலின் தாக்கம் இருந்ததால், கடந்த சில நாள்களாக பூக்கள் வரத்து பாதிக்குப் பாதியாக குறைந்து தினமும் 5 டன்னுக்கும் குறைவான அளவே கொண்டு வரப்பட்டன. இதனால் மல்லிகை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.150 வரை விற்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் கடந்த 2 நாள்களாக நிலவிய இதமான தட்பவெப்பம் காரணமாக மல்லிகை உள்ளிட்ட அனைத்துப் பூக்களின் வரத்து

அதிகரித்தது. திங்கள்கிழமை 7 டன்கள் வரை பூக்கள் வரத்து இருந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர். ஆனால், சுற்றுவட்டாரங்களிலிருந்து நள்ளிரவு முதல் சிறு வியாபாரிகள் வரத்து வெகுவாக குறைந்ததால், திங்கள் கிழமை பூக்கள் விலை வீழ்ச்சியடைந்தது. மல்லிகைப் பூ குறைந்தபட்சம் கிலோ ரூ.70க்கும் அதிகபட்சமாக ரூ.100க்கும் விற்கப்பட்டது. பெங்களூரு உயர்நீதிமன்றத்தில் அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேர் மீதான தீர்ப்பு வெளியாக இருந்ததன் காரணமாகவே, சுற்றுவட்டார சிறு வியாபாரிகள் வரத்து வெகுவாக குறைந்திருந்து. அதிகாலை முதல் சாரல் மழை பெய்து வந்ததுடன், அஷ்டமி உள்ளிட்ட காரணங்களால் பூக்கள் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டதாக, வியாபாரிகள் தெரிவித்தனர்.

திங்கள் கிழமை மார்க்கெட்டில் பூக்களின் விலை விபரம் வருமாறு:(கிலோவுக்கு)பிச்சிப்பூ ரூ.30, சென்னைமல்லி ரூ.80, ரோஜா ரூ.40,முல்லை ரூ.120, கொழுந்து ரூ.30, துளசி ரூ.30, செவ்வந்தி ரூ.60, கோழிக்கொண்டைப் பூ ரூ.30, சம்பங்கி ரூ.50, வாடாமல்லி ரூ.30.

### குன்னூர் ஏல மையத்தில் 31% தேயிலைத் தூள் தேக்கம்

குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 19-ஆவது ஏலத்தில், 31 சதவீதம் தேயிலைத் தூள் தேக்கமடைந்துள்ளதாக வர்த்தக அமைப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து, குன்னூர் தேயிலை வர்த்தக அமைப்பு திங்கள்கிழமை தெரிவித்துள்ளதாவது: வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் 19.02 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது. இதில், இலை ரகம் ரூ. 13.38 லட்சமும். டஸ்ட் ரகம் ரூ. 5.64 லட்சமும் அடங்கும்.

இந்த ஏலத்தில் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று இருந்தாலும் தரமான தேயிலைத் தூளை மட்டுமே கொள்முதல் செய்ததால், 31 சதவீதம் தேயிலைத் தூள் தேக்கமடைந்ததுடன் அனைத்து ரகத்திற்கும் கிலோ ரூ. 2 வரை விலை குறைந்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ. 50 முதல் ரூ. 54, உயர் வகை ரூ. 100 முதல் ரூ. 150, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ. 50

முதல் ரூ. 60 வரையிலும், உயர் வகை ரூ. 110 முதல் ரூ. 160 வரையும் விலை கிடைத்தது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக ரூ. 201, ஆர்த்தோ டக்ஸ் ரகத்திற்கு ரூ. 240 விலை வழங்கப்பட்டது.

அடுத்த ஏலம் வரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நடைபெறவுள்ளது. இதில், 19.68 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்குத் தயாராக உள்ளது. தேயிலை மகசூல் அதிகரித்து வரும் நிலையில் அதன் விற்பனையும், விலையும் குறைந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## குன்னூரில் பலத்த மழை

குன்னூரில் பலத்த மழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரமாக குன்னூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்து வருகிறது. இதனால், கோடை சீசனுக்காக தோட்டக்கலை துறைக்குச் சொந்தமான பூங்காக்களில் நடவு செய்யப்பட்டுள்ள மலர்ச் செடிகள் அழுகத் துவங்கி உள்ளன. இதனால், சிம்ஸ்பூங்கா, காட்டேரிப் பூங்காவில் மலர்ச் செடிகளைப் பாதுகாக்க பிளாஸ்டிக் போர்வைகள் போர்த்தப்பட்டுள்ளன.

இதற்கிடையே, திங்கள்கிழமை மதியம் 1 முதல் 3 மணி வரை குன்னூரில் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக, குன்னூர் - மேட்டுப்பாளையம் மலைப் பாதையிலுள்ள அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## உதகை மலர்க்காட்சி: மே 15-இல் விடுமுறை

உதகையில் மலர்க்காட்சியையொட்டி, மே 15-ஆம் தேதி நீலகிரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது. நீலகிரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் மாவட்ட நிர்வாகம், சுற்றுலாத்துறை, தோட்டக் கலைத்துறை உள்ளிட்ட பல்வேறு

அமைப்புகளோடு இணைந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில், தொடக்க நிகழ்ச்சியாக தோட்டக்கலைத் துறையின் சார்பில், கோத்தகிரி நேரு பூங்காவில் காய்கறிக் கண்காட்சியும், கூடலூரில் வாசனை திரவியக் கண்காட்சியும், உதகை அரசினர் ரோஜாப் பூங்காவில் ரோஜா கண்காட்சியும் நடத்தப்பட்டது.

முக்கிய நிகழ்வான மலர்க்காட்சி, உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் மே 15-ஆம் தேதி தொடங்குகிறது. 3 நாள்கள் நடைபெறும் இக்கண்காட்சி மே 17-ஆம் தேதி நிறைவடைகிறது. இந்நிலையில், தொடக்க நாளான வெள்ளிக்கிழமை நீலகிரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: உதகையில் மே 15-ஆம் தேதி 119-ஆவது மலர்க்காட்சி நடைபெறவுள்ளதால் மாவட்டத்திலுள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டக் கருவூலம் மற்றும் சார்நிலைக்கருவூலகங்கள் அரசு பாதுகாப்புக்கான அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களுடன் செயல்படும். இந்த விடுமுறையை ஈடு செய்யும் வகையில் ஜூன் 6-ஆம் தேதி நீலகிரி மாவட்டத்திற்கு பணி நாளாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

### முதியோர் இல்லத்தில் சூரிய ஒளி மின்சக்தி அமைப்பு தொடக்கம்

தூத்துக்குடி அருகேயுள்ள கூட்டாம்புளி அன்பு உள்ளங்கள் முதியோர் காப்பகத்தில் மனநல காப்பகப் பிரிவுக்கு புதிய கட்டடம் திறப்பு விழா மற்றும் சூரிய மின்சக்தி அமைப்பு தொடக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் தலைமை வகித்தார். மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் எஸ்.பி. சண்முகநாதன் புதிய கட்டடத்தை

திறந்துவைத்தார். மேலும், சூரிய ஒளி மின் உற்பத்தி அமைப்பையும் அவர் தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில், மாநகராட்சி மேயர் ஏபிஆர் அந்தோணி கிரேஸ், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஆர். ரவிகுமார், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் பிடிஆர் ராஜகோபால், ஸ்பிக் நிறுவன நிர்வாகி ராமகிருஷ்ணன், தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பொது மேலாளர் குணசேகரன், அன்பு உள்ளங்கள் அறங்காவலர்கள் விஜயாசத்திய சாமுவேல், ஜெயசீலன், தீபா ஏசுவடியான், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் சாந்திகுளோரி எமரால்டு, ஸ்பிக் நகர் அரிமா சங்கத் தலைவர் ராஜேஷ்குமார், அன்பு உள்ளங்கள் காப்பக பொருளாளர் ஷீலா ஜெயசீலன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**ஆறுமுகனேரி, காயல்பட்டினத்தில் சாரல் மழை**

ஆறுமுகனேரி, காயல்பட்டினம் உள்ளிட்ட பகுதிகளில் திங்கள்கிழமை சாரல் மழை பெய்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் வானம் இருண்டு காணப்படுகிறது. வெயில், வெப்பம் இன்றி குளிர்ந்த வானிலை நிலவுகிறது. இதுவரை கடும் வெப்பத்தால் அவதியுற்ற மக்கள் தொடர்ந்து மூன்று தினங்களாக பெய்துவரும் சாரல் மழை காரணமாக நிம்மதியடைந்தனர்.

இப் பகுதியில் கோயில் கொடை விழாக்கள் நடைபெற்று வருவதால் வெளியூரிலிருந்து வந்துள்ள பக்தர்கள் குளிர்ந்த வானிலை காரணமாக மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தொடர்ந்து ஆறுமுகனேரி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் உப்பு உற்பத்தி பாதிப்படைந்துள்ளது. விலை உயர்ந்த நிலையில் உப்பு உற்பத்தி பாதிப்பது உற்பத்தியாளர்களை கவலையடையச் செய்துள்ளது.

## நெல்லையில் சாரல் மழையால் இதமான சூழல்: மக்கள் மகிழ்ச்சி

திருநெல்வேலி மாவட்டத்தில் திங்கள்கிழமை காலையிலிருந்து சாரல் மழை பெய்ததால், வெயிலின் தாக்கம் குறைந்து இதமான சூழல் நிலவியது. இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

வளி மண்டலத்தில் ஏற்பட்ட மேலடுக்கு சுழற்சி காரணமாக தென்தமிழகத்தில் திங்கள்கிழமை மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

அதன்படி, அதிகாலையிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாக சாரல் மழை பெய்தது. தொடர்ந்து நாள் முழுவதும் சாரல் நீடித்தது. வெயிலின் தாக்கமின்றி குளுமையான சூழல் காணப்பட்டதால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

பதிவான மழை: திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு (மி.மீட்டரில்):

கருப்பாநதி அணை 14, அடவிநயினார் அணை 4, களக்காடு 4.2, பாளையங்கோட்டை 3, திருநெல்வேலி 1.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 70.40 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 83.27 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 83.37 அடியாகவும் இருந்தது.

குடிநீர் மற்றும் முன் கார் பருவ தேவைக்காக பாபநாசம் அணையிலிருந்து 305 கனஅடியும், மணிமுத்தாறு அணையிலிருந்து 145 கனஅடியும், கடனாநதி, ராமநதி அணைகளிலிருந்து தலா 10 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

**மே 15இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் மே 15-ம் தேதி நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் எனது தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும், விவசாயிகளும் பங்கேற்று தங்கள் கோரிக்கைகளை மனுவாக அளித்து பயனடையலாம் என அதில் குறிப்பிட்டுள்ளார்.

**கரும்புக்கு நியாயமான விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் மத்திய அரசுக்கு, கரும்பு விவசாயிகள் சங்கம் கோரிக்கை**



மதுரை,

கரும்புக்கு நியாயமான விலை கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு கரும்பு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சர்க்கரை ஆலைகளுக்கு லாபம்

தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் என்.பழனிச்சாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

கரும்பில் இருந்து தயாராகும் சர்க்கரை விற்பனை மூலம் ஆலைகளுக்கு கிடைக்கும் லாபத்தின் ஒரு பகுதி விவசாயிகளுக்கு அளிக்கப்படவேண்டும் என்று பார்கவா குழு, அரசுக்கு பரிந்துரைத்தது. ஆனால், இதை செயல்படுத்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சர்க்கரை ஆலைகளுக்கான 10 சதவீத தீர்வையை மத்திய அரசு ரத்து செய்துள்ளது.

இதனால் சர்க்கரை ஆலைகளுக்கு அதிக லாபம் கிடைக்கிறது. ஒரு டன் கரும்பில் இருந்து 1,163 ரூபாய் ஆலைக்கு லாபம் கிடைக்கிறது. 3 ஆயிரத்து 500 டன் கரும்பு அரவைத்திறன் உள்ள ஒரு ஆலைக்கு 40 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

நியாயமான விலை

எனவே, சர்க்கரைத் துறையில் நெருக்கடி என்று ஆலை அதிபர்கள் கூறுவது ஏமாற்று வேலை. நஷ்டம் காரணமாக ஒரு சர்க்கரை ஆலைகூட இதுவரை மூடப்படவில்லை. சர்க்கரை ஏற்றுமதிக்காக ஆலைகளுக்கு ஒரு டன்னுக்கு 4 ஆயிரம் ரூபாய் மானியமாக மத்திய அரசு வழங்குகிறது.

மத்திய அரசின் பல்வேறு நடவடிக்கைகளால் சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. அதே வேளையில் கரும்பு விவசாயிகளை பாதுகாக்க மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததால் கரும்பு விவசாயிகள் தற்கொலை அதிகரித்து வருகிறது.

அதுமட்டுமல்லாமல் கரும்பு விவசாயிகள் சாகுபடியை கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே, கரும்பு விவசாயத்தை பாதுகாக்கவும், கரும்புக்கு நியாயமான விலை கிடைக்கவும் மத்திய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை



பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ள னர். வெற்றிலை பயிரீடுநாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா காவிரி கரையோர பகுதிகளில் உள்ள பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அணிச் சம்பாளையம், பொய்யேரி, நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டு உள்ளது.

இங்கு விளையும் வெற்றிலைகள் சேலம், ஊட்டி, கோவை, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், கர் நாடகா, ஆந்திரா, கேரளா, மகாராஷ்டிரா, குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங் களுக்கும் தினந்தோறும் லாரிகள் மற்றும் ரெயில்கள் மூலமாக அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் பரமத்தி வேலூர் நான்கு ரோடு பழைய பைபாஸ் சாலையில் வெற்றிலை ஏல மார்க்கெட் உள்ளது. இங்கும் வெற்றிலை ஏலம் நடைபெற்று வருகிறது. விலை வீழ்ச்சிகடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் கற்பூரி இளங்கால் வெற்றிலை மார் 104 கவுளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ. 2 ஆயிரத்துக்கும், வெள்ளைக் கொடி இளங்கால் வெற்றிலை சுமை ஒன்று ரூ.4 ஆயிரத் துக்கும் ஏலம் போனது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் கற்பூரி இளங்கால் வெற்றிலை மார் 104 கவுளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ. 1500 -க்கும், வெள்ளைக்கொடி இளங்கால் வெற்றிலை சுமை ஒன்று ரூ.3 ஆயிரத்துக்கும் ஏலம் போனது. வெளிமாநில வெற்றிலை தமிழகத்திற்கு வருவதால் பரமத்திவேலூர் வெற்றிலை மார்க்கெட்டில் விலை சரிவடைந்து உள்ளதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

## வால்பாறையில் இடைவிடாத மழை: ஆறுகளில் வெள்ளப்பெருக்கு



வால்பாறை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் இடைவிடாமல் பெய்து வரும் மழையின் காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

பலத்த மழை

வால்பாறை பகுதியில் கோடை சீசன் தொடங்கிய நிலையில், கடந்த 2 வாரத்துக்கு மேலாக தொடர் மழை பெய்து வருகிறது. ஆண்டுதோறும் வால்பாறை பகுதியில் மே மாதம் முழுவதும் கடும் வெப்பம் நிலவும். அதன்பின்னர் ஜூன் மாதம் முதல் வாரத்தில் இருந்து தென்மேற்கு பருவ மழை பெய்ய தொடங்கும்.

ஆனால் இந்த ஆண்டு ஏற்பட்ட பருவநிலை மாற்றம் காரணமாக மே மாதம் முதல் வாரத்தில் இருந்தே வால்பாறை சுற்றுவட்டார பகுதி முழுவதும் பலத்த இடியுடன் கூடிய கன மழையும், சில நேரங்களில் லேசான மழையும் பெய்து வருகிறது.

வெள்ளப்பெருக்கு

தொடர் மழையின் காரணமாக வால்பாறை பகுதியில் உள்ள ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக சோலையார் அணைக்கு முக்கிய நீர் ஆதாரமாக பச்சைமலை ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

நேற்று காலை முடிவடைந்த 24 மணிநேரத்தில் அதிகபட்சமாக சோலையார் அணையில் 60 மி.மீ., வால்பாறை, நீரார் 3 மி.மீ., மழையும் பெய்துள்ளது. அணைக்கு வினாடிக்கு 134.26 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் நீர்மட்டம் 19.15 அடியாக உயர்ந்துள்ளது.

## குமரி மாவட்டத்தில் தொடரும் கோடை மழை அணைகளின் நீர்மட்டம் படிப்படியாக உயர்கிறது



குமரி மாவட்டத்தில் கோடை மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் அணைகளின் நீர்மட்டம் படிப்படியாக உயர்கிறது.கோடை மழைகுமரி மாவட்டத்தில் கோடை வெயிலுக்கு ஈடாக, கோடை மழையும் பெய்து வருகிறது. விட்டு, விட்டு பெய்து வந்த மழை கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து கொண்டிருக்கிறது. நேற்று முன்தினம் இரவிலும் குமரி மாவட்டத்தில் மழை பெய்தது. நள்ளிரவில் சாரலாக விழுந்து கொண்டிருந்தது.நேற்று அதிகாலையில் இருந்தே வானம் கருமேகக்கூட்டங்களால் சூழ்ந்திருந்ததோடு, சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது. இதனால் நேற்று காலையில் இருந்து மாலை வரை

சூரிய ஒளியை காணமுடியவில்லை. இதனால் நாகர்கோவிலில் சாலைகளில் நடந்து செல்வோர் குடைகளை பிடித்தவாறும், இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் மழைகோட் அணிந்தவாறும் சென்றதை காணமுடிந்தது. நேற்று காலையில் இருந்து பகல் முழுவதும் சாரலாக விழுந்து கொண்டிருந்த மழை, தற்போது அக்னி நட்சத்திர காலமா? அல்லது பருவமழை காலமா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. நேற்று காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் குமரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.) வருமாறு:-மழை அளவுபொய்கை- 4, மாம்பழத்துறையாறு- 4, முக்கடல்- 2, நாகர்கோவில்- 4, பூதப்பாண்டி- 3, கன்னிமார்- 4.8, மயிலாடி- 2.8, கொட்டாரம்- 3, இரணியல்- 6, ஆணைக்கிடங்கு- 11, குருந்தங்கோடு- 12.8, அடையாமடை- 2, கோழிப்போர்விளை- 6, முள்ளங்கினாவிளை- 5, திற்பரப்பு- 3.4 என்ற அளவில் மழை பெய்திருந்தது. அதேசமயம் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார்- 1, 2 அணைகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வந்த மழை நேற்று முன்தினம் இல்லை. இதனால் அணைகளுக்கு வரும் தண்ணீர் வரத்தின் அளவு குறைந்து விட்டது. நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 62 கன அடியும், பெருஞ்சாணி அணைக்கு 74 கன அடியும், சிற்றார்-1 அணைக்கு 33 கன அடியும், சிற்றார்-2 அணைக்கு 45 கன அடியும் வந்து கொண்டிருந்தது.முழு கொள்ளளவை எட்டும் இவ்வாறு தொடர்ந்து பெய்து வரும் கோடை மழையினாலும், அணைகளுக்கு தண்ணீர் வரத்து இருந்து கொண்டிருப்பதாலும் அணைகளின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்த வண்ணமாகவே இருந்து வருகிறது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 34.45 அடியாகவும், பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 63.35 அடியாகவும், சிற்றார்- 1 அணை நீர்மட்டம் 13.42 அடியாகவும், சிற்றார்- 2 அணை நீர்மட்டம் 13.51 அடியாகவும், பொய்கை அணை நீர்மட்டம் 7.70 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணை நீர்மட்டம் முழு கொள்ளளவான 54.12 அடியாகவும் இருந்தது. நாகர்கோவில் நகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்துவரும் முக்கடல் அணையின் நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து

கொண்டே இருக்கிறது. நேற்றைய நிலவரப்படி இந்த அணையின் நீர்மட்டம் 5.25 அடியாக இருந்தது.இதேபோல் கோடை மழை தொடர்ந்து பெய்தால் இன்னும் சில நாட்களில் அணைகளின் நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்ட வாய்ப்புள்ளது என்று பொதுப்பணித்துறை அதிகாரிகளால் கூறப்படுகிறது.

## ஊட்டியில் 119–வது மலர் கண்காட்சி: நீலகிரி மாவட்டத்திற்கு 15–ந்தேதி உள்ளூர் விடுமுறை கலெக்டர் சங்கர் அறிவிப்பு



ஊட்டி,

ஊட்டி அரசு தாவரவி யல் பூங்காவில் 119–வது மலர் கண்காட்சியை முன்னிட்டு 15–ந் தேதி நீலகிரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டு உள்ள தாக மாவட்ட கலெக்டர் சங்கர் தெரிவித்து உள் ளார்.

119–வது மலர் கண்காட்சி

நீலகிரி மாவட்டத்தில் கோடை விழாவின் சிறப்பு அம்சமாக மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. இதன்படி இந்த ஆண்டு 119–வது மலர் கண்காட்சி 15–ந் தேதி (வெள்ளிக்கிழமை) தொடங்கி 3 நாட்கள் நடக்கிறது. இந்த மலர் கண்காட்சியில் சுமார் ஒரு லட்சம் கொய் மலர் களை கொண்டு அழகிய தாஜ் மகால் வடிவம் உருவாக்க திட்டமிடப் பட்டு உள்ளது.

இது தவிர ஆயிரக்கணக்கான மலர்களை கொண்டு பல்வேறு வகையான மலர் அலங்கார மும் செய்யப்பட உள்ளது.

உள்ளூர் விடுமுறை

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 15–ந் தேதி மலர் கண்காட்சி தொடங்கு வதை முன்னிட்டு நீலகிரி மாவட் டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:– மலர் கண்காட்சியை முன் னிட்டு நீலகிரி மாவட்டத் திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப் படுகிறது. அதன்படி 15–ந் தேதி ( வெள்ளிக்கிழமை) மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநில அரசு அலு வலகங்களுக்கும் உள்ளூர் விடு முறை அறிவிக்கப்படுகிறது.

இந்த நாளில் மாவட்ட கருவூலம் மற்றும் சார்நிலை கருவூலகங்கள் அரசு பாதுகாப் புக்கான அவசர அலுவல்களை கவனிக்கும் குறிப்பிட்ட பணி யாளர்களுடன் செயல்படும். இதற்கு பதிலாக வருகிற 6.6.2015 (சனிக்கிழமை)அன்று மாவட்டத்தில் பணிநாளா கவும் அறிவிக்கப்படுகிறது.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## ஊட்டி ரோஜா மலர் கண்காட்சி நிறைவு: 40 ஆயிரம் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர்



ஊட்டியில் 2 நாட்கள் நடைபெற்ற ரோஜா மலர் கண்காட்சியை 40 ஆயிரம் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர்.

<u>14–வது ரோஜா கண்காட்சி</u>

கோடை சீசனை முன்னிட்டு ஊட்டி ரோஜா பூங்காவில் நேற்று முன்தினம் 14–வது ரோஜா மலர் கண்காட்சி நடைபெற்றது. இந்த மலர் கண்காட்சியை கலெக்டர் சங்கர் தொடங்கி வைத்தார். கண்காட்சியில்

பல்வேறு ரோஜா மலர்களை கொண்டு உருவாக்கப்பட்ட குதிரை, சிங்கம், பாண்டா கரடி ஆகியவற்றை சுற்றுலா பயணிகள் கண்டு களித்தனர்.

மேலும், மலர் கண்காட்சியின் சிறப்பு அம்சமாக 30 ஆயிரம் ரோஜா மலர்களை கொண்டு பரதநாட்டியம் ஆடும் மங்கைகளின் உருவம் தத்ரூபமாக அமைக்கப்பட்டு இருந்தது. இதன் அருகே நின்று ஏராளமான சுற்றுலா பயணிகள் புகைப்படம் எடுத்து கொண்டனர்.

40 ஆயிரம் சுற்றுலா பயணிகள்

2–வது நாளான நேற்று ரோஜா கண்காட்சியை காண ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். இதனால் ரோஜா பூங்கா முழுவதும் சுற்றுலா பயணிகளின் கூட்டம் தான் காணப்பட்டது. 2 நாட்களில் ரோஜா மலர் கண்காட்சியை 40 ஆயிரம் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்ததாக அதிகாரி ஒருவர் கூறினார்.

ஊட்டிக்கு சுற்றுலா பயணிகள் ஏராளமான வாகனங்களில் வந்ததால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. போலீசார் உடனுக்குடன் போக்குவரத்தை சீரமைத்தனர்.

பரிசளிப்பு விழா

இந்த நிலையில், ஊட்டி ரோஜா பூங்காவில் நேற்று மாலை 4 மணியளவில் ரோஜா கண்காட்சி நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு கலெக்டர் சங்கர் தலைமை தாங்கி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். பின்னர் அவர் பேசும் போது கூறியதாவது:–

கோடை விழாவின் ஒரு பகுதியாக இந்த மலர் கண்காட்சி நடைபெறுகிறது. 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் ரோஜா மலர்கள் பயன்பாட்டிற்கு வந்தன. இந்த மலர்களை கொண்டு ஆயுர்வேதத்தில் பல்வேறு மருந்துகள் தயாரிக்கப்பட்டன. தற்போது இந்த மலர்கள் அலங்காரத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.

சர்வதேச பூங்காக்களில் ஒன்றாக தேர்வு

ஊட்டி ரோஜா பூங்காவில் தற்போது 4 ஆயிரம் ரகங்களை சேர்ந்த 30 ஆயிரம் மலர் செடிகள் உள்ளன. இதில் 120 ரோஜாக்கள் பாராம்பரியமாக அறிவிக்கப்பட்டு உள்ளது. கடந்த 2014–ம் ஆண்டு இந்த

பூங்காவிற்கு வந்த உலக ரோஜா சம்மேளன குழுவினர் இந்த பூங்காவை சர்வதேச பூங்காக்களில் ஒன்றாக அறிவித்தனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த விழாவில் சிறந்த பூங்காவிற்கான விருதுகளை குட்செப்பேர்டு பள்ளி, மனித உடற்கூறு ஆராய்ச்சி மையம், ஸ்டெர்லிங் பயோடெக் நிறுவனம் ஆகியவை தட்டி சென்றன. மேலும் சிறந்த அரங்குகள் அமைத்தவர்களுக்கு பரிசு கோப்பைகள் வழங்கப்பட்டன. இதில், மொத்தம் 37 சுழற்கோப்பைகள் வழங்கப்பட்டது. இதேபோல் தோட்டக் கலை துறை அரங்குகளுக்கு பரிசு கோப்பைகளும் வழங்கப்பட்டன.

இந்த விழாவில் மாவட்ட ஊராட்சி தலைவர் மேனகா, ரோஜா சங்க தலைவர் கிருஷ்ணகுமார், தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி, துணை இயக்குனர் சிவசுப்பிரமணி, உதவி இயக்குனர்கள் மீராபாய், உமாராணி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் மழை



தூத்துக்குடி மாவட்டத்தில் பல இடங்களில் நேற்று காலை முதல் இரவு வரையிலும் லேசான மழை பெய்தது. ஸ்ரீவைகுண்டத்தில் நேற்று காலை 10 மணி அளவில் பலத்த மழை சுமார் ஒரு மணி நேரம் பெய்தது. திருச்செந்தூர், ஆறுமுகநேரி, காயல்பட்டினம், ஆத்தூர், ஏரல், தென்திருப்பேரை, குரும்பூர், ஆழ்வார்திருநகரி உள்ளிட்ட பகுதிகளில் காலை முதல் இரவு வரையிலும் மழை விட்டுவிட்டு பெய்தது.

கோவில்பட்டி, கயத்தாறு, விளாத்திகுளம், கழுகுமலை, எட்டயபுரம், ஓட்டப்பிடாரம், சாயர்புரம், நாசரேத், உடன்குடி, சாத்தான்குளம், தட்டார்மடம், மெஞ்ஞானபுரம், குலசேகரன்பட்டினம், செய்துங்கநல்லூர்,

கருங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் காலை முதல் மாலை வரையிலும் லேசான மழை பெய்தது.

## அக்னி வெயிலின் தாக்கத்தை தணித்த கோடைமழை



அக்னி நட்சத்திர வெயிலின் தாக்கத்தை குறைக்கும் வகையி

ல் சிவகங்கை, காரைக்குடி உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தது.

<u>கோடை மழை</u>

அக்னி நட்சத்திரம் என்று அழைக்கப்படும் கத்திரி வெயில் கடந்த சில தினங்களாக சிவகங்கை மாவட்டத்தில் மக்களை வாட்டி வதைத்தது. இந்தநிலையில் சிவகங்கை, காரைக்குடி உள்பட பல்வேறு பகுதியில் கோடைமழை பெய்து குளிரச் செய்தது. சிவகங்கையில் நேற்று காலை முதல் சூரியனை பார்க்க முடியவில்லை. பகல் முழுவதும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. நகரில் தூறல் விட்டு விட்டு பெய்தது. இதனால் பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

காரைக்குடியில் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. காலை 8.30 மணியளவில் மேகமூட்டத்துடன் திரண்டு நின்ற வானம் திடீரென பலத்த மழை பெய்தது. இந்த மழை சுமார் 1மணி நேரத்திற்கும் மேல் நீடித்தது.

இதனால் காரைக்குடி பெரியார் சிலை, 100அடி ரோடு, செக்காலை ரோடு, கல்லூரி சாலை, தேவர் சிலை ஆகிய இடங்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

வெயில் தணிந்தது

அதன்பின் பகல் முழுவதும் வானம் மேகமூட்டத்துடன் இருட்டியவாறே காணப்பட்டது. இதன்காரணமாக நேற்று காரைக்குடி பகுதி முழுவதும் கோடை சுற்றுலா தலமான ஊட்டி, கொடைக்கானல் போன்று குளுமையாக காணப்பட்டது. இதனால் பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். மானாமதுரை, திருப்பத்தூர், தேவகோட்டை, காளையார்கோவில், சிங்கம்புணரி உள்பட பல இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இந்த கோடை மழை இன்னும் சில நாட்கள் நீடித்தால் அக்னி நட்சத்திர வெயிலின் தாக்கம் இருக்காது என பொதுமக்கள் தெரிவித்தனர்.

## கடமலை–மயிலை ஒன்றியத்தில் மழையால் முருங்கை உற்பத்தி பாதிப்பு விவசாயிகள் கவலை



கடமலை – மயிலை ஒன்றியத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், முருங்கைக்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

முருங்கைக்காய் சீசன்

தேனி மாவட்டம் கடமலை–மயிலை ஒன்றியத்தில் அதிக ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடைபெற்று வருகிறது. குறிப்பாக தென்னை, முருங்கை விவசாயம் அதிக அளவில் நடந்து வருகிறது. இந்நிலையில் கடந்த மாதம் முருங்கை காய்கள் சீசன் தொடங்கியதால், மரங்களில் பூக்கள் உற்பத்தியானது.

விவசாயிகள் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளித்து மரங்களை பராமரித்து வந்தனர். முருங்கைக்காய் விளைச்சல் அதிகரிப்பால் சந்தைகளில் முருங்கை விலையும் அதிகரித்து வந்தது.

இந்நிலையில் 10 நாட்களாக கடமலை—மயிலை ஒன்றியத்தில் அனைத்து பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக முருங்கை மரத்தில் உற்பத்தியான பூக்கள் அனைத்தும் உதிர்ந்துவிட்டன.

<u>விவசாயிகளுக்கு நஷ்டம்</u>

இதனால் இந்த ஆண்டு முருங்கை சீசனில் விவசாயிகளுக்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியது. மேலும் மரத்தில் உற்பத்தியான முருங்கை காய்களும் மழையால் சேதமடைந்து விட்டதால் சந்தைகளில் குறைந்த விலைக்கே விற்பனையானது. இதனால் இந்த ஆண்டு விவசாயிகளுக்கு அதிக அளவில் நஷ்டம் ஏற்பட்டு உள்ளது.

இருப்பினும் கோடை காலத்தில் மழை பெய்து வருவதால் வைகை ஆற்றில் நீர்வரத்து ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாய நிலங்களில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் அதிகரித்து வருவது விவசாயிகளுக்கு ஒருபுறம் ஆறுதலாக அமைந்துள்ளது.

தினகரன்

**முதன் முறையாக இத்தாலியன் பூங்காவில் 6 ஆயிரம் தொட்டிகளில் மலர் அலங்காரம்**




ஊட்டி: மலர் கண் காட்சியை முன்னிட்டு, ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் முதல் முறையாக வண்ண மலர் தொட்டிகளை கொண்டு பல

வடிவங்களில் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளது. இது சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது.ஆண்டு தோறும் ஊட்டியில் நடக்கும் மலர் கண்காட்சியில், பல்வேறு வகையான மலர்களை கொண்டு அலங்காரங்கள் செய்யப்படுகிறது. 15 ஆயிரம் தொட்டிகளில் மலர் செடி வளர்க்கப்பட்டு, அதனை அலங் கார மாடங்களில் அடுக்குவது வாடிக்கை. இதனை சுற்றுலா பயணிகள் கண்டு மகிழ்வது வழக்கம். இம்முறை முதன் முறையாக, இத்தாலியன் பூங்காவில் மலர் தொட்டிகளை வைத்து அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளது.நட்சத்திரம், அரை வட்டம், வண்ணத்துப்பூச்சி என 6 ஆயிரம் தொட்டிகளில் பல்வேறு அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன. இது தவிர 2 ஆயிரம் லில்லியம் மலர் செடி அலங்காரமும் அங்கு வைக்கப்படவுள்ளன. தற்போது மலர் தொட்டிகளை அடுக்கும் பணி முடிந்த நிலையில், பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் இதனை கண்டு ரசித்து செல்கின்றனர். எனினும், ஊட்டியில் தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில், மலர் கண்காட் சிக்கு முன், கன மழை பெய்தால் மலர் அலங்காரம் பாதிக்கும் என்ற அச்சத் தில் தோட்டக்கலைத்துறையினர் உள்ளனர்.

**வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தில் பரவலாக இடியுடன் மழை பெய்யும்**

சென்னை: குமரிக் கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் அனேக இடங்களில் மழை பெய்யும். காவிரி டெல்டா பகுதியில் கன மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் கடந்த 4ம் தேதி முதல் அக்னி நட்சத்திரம் என்னும் கத்திரி வெயில் கொளுத்தி வருகிறது. தமிழகத்தில் சில மாவட்டங்களில் 102 டிகிரி வரை வெயில் சுட்டெரித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தென் மாவட்டங்களில் வெப்ப சலனம் காரணமாக சில இடங்களில் இடியுடன் மழையும் பெய்து வருகிறது. ஆனால் வட மாவட்டங்களில் வறண்ட வானிலை காரணமாக வெயில் கடுமை அதிகரித்து வருகிறது. இந்நிலையில், அதிகரித்து வரும்

வெயில் காரணமாக வெப்ப சலனம் ஏற்பட்டு நேற்று தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்து வருகிறது. அதிக பட்சமாக நேற்று பட்டுக்கோட்டை, தூத்துக்குடி, அதிராம்பட்டினம், கொல்லிமலை ஆகிய இடங்களில் 40 மிமீ மழை பெய்துள்ளது. வாடிப்பட்டி, கழுகுமலை, விளாத்திக்குளம், திருப்பூர், காமாட்சிபுரம், பேராவூரணி, சோழவந்தான் 30 மிமீ, அறந்தாங்கி, முதுகுளத்தூர், கூடலூர், உசிலம்பட்டி, சூரங்குடி, மணியாச்சி, கடலாடி, அரண்மனைப்புதூர், போடி நாயக்கனூர் 20 மிமீ மழை பெய்துள்ளது. இந்நிலையில், வெப்ப சலனம் காரணமாக குமரிக்கடல் மற்றும் அதை ஒட்டியுள்ள பகுதிகளின் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவாகியுள்ளது. இது குமரிக் கடல் பகுதியில் இருந்து சென்னை, புதுச்சேரி கடலோரப் பகுதிவரை பரவியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்யும். காவிரி டெல்டா பகுதியில் கனமழை பெய்யும். சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும்.

## மலர் கண்காட்சியை முன்னிட்டு வரும் 15ம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிப்பு

ஊட்டி, : மலர் கண்காட்சியை முன்னிட்டு வரும் 15ம் தேதி வெள்ளிக்கிழமை உள்ளூர் விடுமுறை அறிவித்துமாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. ஆண்டு தோறும் கோடை விடுமுறையின் போது, ஊட்டிக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இவர்களை மகிழ்விக்க பல்வேறு நிகழ்ச்சி மற்றும் கண்காட்சி நடத்தப்படுகின்றன. அன்றைய தினம் ஊட்டியில் மக்கள் கூட்டம் அலைமோதும். இதனால், பெரும்பாலான சாலைகள் ஒரு வழிப்பாதைகளாக மாற்றப்படும். வாகனங்களும் அங்காங்கே நிறுத்தப்பட்டு போக்குவரத்து பல மணி நேரம் ஸ்தம்பிக்கும். இதனால், அன்றைய தினம் உள்ளூர் மக்கள் தங்களது அன்றாட பணிகளை மேற்க்கொள்வதில் கடும் சிரமம் ஏற்பட்டு வருகிறது.

மேலும், உள்ளூர் மக்கள் அன்றைய தினம் மலர் கண்காட்சியை காண தாவரவியல் பூங்காவிற்கு செல்வது வழக்கம். எனவே, அரசு மலர் கண்காட்சி நடத்தப்படும் நாட்களில் உள்ளூர் விடுமுறை அறிவித்து வருகிறது. இதன்படி, இம்முறை வரும் 15ம் தேதி வெள்ளிக்கிழமை மலர் கண்காட்சி துவங்கும் நிலையில், அன்றைய தினம் உள்ளூர் விடுமுறை அறிவித்துள்ளது. அதற்கு பதிலாக, அடுத்த மாதம் 6ம் தேதி சனிக்கிழமை பணி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.. இது தொடர்பாக, கலெக்டர் சங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:வரும் 15ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று ஊட்டியில் 119வது மலர் கண்காட்சி தாவரவியல் பூங்காவில் நடக்கிறது.

இதனை தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநில, அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களுக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்படுகிறது. இந்த நாளில், மாவட்ட கருவூலம் மற்றும் சார் நிலை கருவூலங்கள் அரசு பாதுகாப்பாக்கான அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களுடன் செயல்படும். 15ம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்படும் நிலையில், அதற்கு பதிலாக அடுத்த மாதம் (ஜூன் மாதம்) 6ம் தேதி இம்மாவட்டத்திற்கு பணி நாளாக அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு கலெக்டர் சங்கர் கூறியுள்ளார்.

**சாரல் மழை: பொதுமக்கள் மகிழ்ச்சி**

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் பரவலாக நேற்று மிதமான சாரல் மழை பெய்தது. இதனால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அரியலூர் மாவட்டத்தில் கடந்தாண்டு போதிய பருவமழை பெய்யாத காரணத்தினால் பல ஏரி, குளங்கள் வறண்டு நீர்நிலைகள் வற்றி காணப்பட்டது. இதனால் நிலத்தடி நீர் வெகுவாக குறைந்து பல்வேறு கிராமங்களில் குடிநீர் கிடைக்காத நிலை ஏற்பட்டது. அரியலூரில் ஒரு சில இடங்களில் குடிநீர்தட்டுப்பாட்டை கண்டித்து போராட்டமும் நடத்தினர். கோடைக்காலம் துவங்குவதற்கு முன்னரே இப்படி வறட்சியை சந்தித்த மக்களுக்கு கோடைகாலம் துவங்கியவுடன் வெய்யிலின் தாக்கம் மக்களை வாட்டி எடுத்தது. 100’

டிகிரிக்கு மேல் நாளுக்கு நாள் வெய்யிலின் தாக்கம் அதிகரித்து கொண்டே வந்ததே தவிர குறையவில்லை. இதனால் கூலி தொழிலாளர்கள், கட்டிட தொழிலாளர்களின் தங்கள் பணியை செய்வதற்கு சிரமப்பட்டனர்.

மேலும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை வெப்பம் தாங்காமல் வீட்டிற்குள்ளே முடங்கி கிடக்கும் நிலை ஏற்பட்டது. வெப்பத்தின் தாக்கத்தை சமாளிக்க இளநீர், மோர், குளிர்பாணங்கள், நுங்கு, தர்பூசணி, வெள்ளரிபிஞ்சு ஆகியவற்றை உட்கொண்டு சூட்டை தணித்து வந்தனர். இந்நிலையில் அக்னி நட்சத்திரம் என்கின்ற கத்திரி வெய்யில் தற்போது நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக அக்னி வெய்யிலின் உக்கிரம் பொதுமக்களை வாட்டியது.

இந்த நிலையில் நேற்று தட்பவெப்ப நிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டு காலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் குளிர்ந்த காற்று வீசியது. அதைத்தொடர்ந்து காலை 9 மணி அளவில் சாரல் மழை பெய்யத் துவங்கியது. தொடர்ந்து கால் மணி நேரம் சாரல் மழை பெய்ததது. அதன்பின் விட்டு விட்ட காலை 10.30 மணி வரை மழை பெய்தது.அரியலூர் மாவட்டம் முழுவதும் இந்த சாரல் மழை பரவலாக பெய்தது. இதனால் பூமி குளிர்ந்து, கோடை வெயிலின் தாக்கம் குறைந்து மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். விவசாயிகளும் இந்த சாரல் மழை விவசாயத்துக்கு ஏற்றது எனச்சொல்லி மகிழ்ந்தனர்.

**அரியலூர் மாவட்டத்தில் மழையை பயன்படுத்தி கோடை உழவுப்பணிகள் தீவிரம்**

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த மழையை பயன்படுத்தி கோடை உழவுப்பணிகளை விவசாயிகள் தீவிரப்படுத்தி உள்ளனர்.தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் துவங்குவதற்கு முன்னதாகவே கோடை வெயில் பொதுமக்களை வாட்டி எடுத்தது. ஏரி, குளங்கள் வற்றிய நிலையில் விவசாய நிலங்கள் வறன்டு காணப்பட்டது. இதைத்தொடர்ந்து வெப்பத்தை தணிக்கும் வகையில் கடந்த சில

தினங்களுக்கு முன்பு கோடை மழை பரவலாக அனைத்து இடங்களிலும் பெய்தது. இதனால் விவசாய நிலங்கள் குளிர்ந்து காணப்பட்டதால் கோடை உழவு பணிகளை மேற்கொள்ள இதுதான் சரியான தருணம் என்று விவசாயிகள் உழவுப்பணிக்கு ஆயத்தமாகி இருந்தனர். அரியலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியத்தில் காமரசவல்லி, ஏலாக்குறிச்சி, தூத்தூர், திருமழப்பாடி, குலமாணிக்கம், கண்டிராதித்தம், கீழ்காவட்டான்குறிச்சி, திருமானூர், செம்பியக்குடி ஆகிய பகுதிகளிலும், தா.பழூர் ஒன்றியத்தில் கடம்பூர், முட்டுவாஞ்சரி, கோவிந்தப்புத்தூர், அரங்கோட்டை, அணைக்குடி, ஸ்ரீபுரந்தான், அருள்மொழி, மதனத்தூர், வாழைக்குறிச்சி, அடிக்காமலை, குடிகாடு, தென்கச்சி, அண்ணகாரன்பேட்டை, கோடாலிகருப்பூர் ஆகிய பகுதிகளில் தோட்டக்கலை பயிர்களான நிலக்கடலை, செடி முருங்கை, மக்காச்சோளம், கத்திரி, கரும்பு, மிளகாய், எள் மற்றும் சம்பா நெற் பயிர்களும் பயிரிட்டு வருகின்றனர்.

தற்போது கோடை மழை பெய்யாதா என்று எதிர்பார்த்து இருந்த விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் கடந்த சில நாட்களாக போதிய மழை பெய்தது. இந்நிலையில் நிலங்களில் டிராக்டர் மூலமும், கால்நடைகள் மூலமும் உழவு பணியை தீவிரப்படுத்தி உள்ளனர். கோடை உழவு செய்வதன் மூலம் நிலத்திலுள்ள களைச்செடிகள் முற்றிலும் அழிக்கப்படும். மேலும் நிலத்தை உழுதும்போது மண்ணின் அடிப்பாகத்திலிருந்து தேவையற்ற புழுக்கள் வெளியில் வரும். அப்போது அந்த புழுக்கள் வெப்பத்தில் மயங்கிய நிலையில் இருக்கும்போது பறவைகள் அதை கொத்தி தின்னும். இதனால் மண்ணின் தரம் நன்கு பதப்படுத்தப்பட்டு விவசாயத்திற்கு ஏற்ப தயார் நிலைக்கு வந்துவிடும் என்பதால், முன்கூட்டியே உழவுப்பணியை அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் முடுக்கி உள்ளனர். அரியலூர், செந்துறை, ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளிலும் உழவுப்பணியை விவசாயிகள் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

### அரவக்குறிச்சியில் அடை மழை

அரவக்குறிச்சி, : அக்னி நட்சத்திரம் துவங்கியதை அடுத்து அரவக்குறிச்சி பகுதியில் அனல் காற்றுடன் வெயில் வாட்டி வதைக்கின்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் விடிய விடிய மழை பெய்தது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கரூர்: கரூரில் நேற்று காலை முதல் மாலை வரை அவ்வப்போது சாரல் மழை பெய்ததால் கரூர் குளிர்ச்சியாக காணப்பட்டது.

### புதுகையில் மீண்டும் மழை

புதுக்கோட்டை, : புதுக்கோட்டையில் நேற்று முன்தினம் நள்ளிரவு கன மழை பெய்தது. நேற்று காலையும் சாரல் மழை பெய்தது. பகல் முழுவதும் வானம் மேகமூட்டமாகக் காணப்பட்டது. மணமேல்குடியில் அதிகாலை 5 மணி முதல் 8 மணி வரை கோடை மழை மீண்டும் கொட்டித் தீர்த்தது. நேற்று மாலையும் 4 மணி முதல் 5 மணி வரை மழை பெய்தது. கறம்பக்குடி, திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்ததால் ஓரளவுக்கு வெப்பம் தணிந்தது. மக்கள் மனமும் குளிர்ந்தது.

### அதிக விலைக்கு உரம் விற்றால் நடவடிக்கை

பெரம்பலூர், : அதிக விலைகு உரம் விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

20142015ம் ஆண்டு பெரம்பலூர் மாவட்டத்துக்கு 12,378 டன் யூரியா, 2,226 டன் டிஏபி, 4,374 டன் பொட்டாஷ் மற்றும் 14,086 டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் வினியோகிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு பயிர்களின் உரத் தேவைகளை கணக்கிட்டு அதற்குத்தகுந்தபடி உரங்களை முன்கூட்டியே வாங்கி இருப்பு வைக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.உர விற்பனையாளர்கள் தேவையான உரங்களை முன்கூட்டியே கொள்முதல் செய்து, தகுந்த நேரத்தில் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யவேண்டும். விவசாய உபயோகத்துக்கு என ராசயன

உரங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்கி வருகிறது. நேரடி விவசாய உபயோகத்துக்கு மட்டுமே இந்த உரங்களைப் பயன்படுத்த வேண்டும். விற்பனையாளர்கள், மானியத்தில் வழங்கப்படும் உரங்களை விவசாயிகளுக்கு மட்டுமே விற்பனை செய்யவேண்டும். தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்வது உரக் கட்டுப்பாட்டு ஆணையை மீறியசெயலாகும். விற்பனையாளர்கள் உரங்களை அதிகவிலைக்கு விற்றாலோ, உரங்களுக்குத் தகுந்த பில் இல்லாமல் விற்பனை செய்தாலோ மற்றும் உரங்களை விவசாயம் அல்லாத பிற தொழில்களுக்கு விற்பனை செய்தாலோ அவர்கள் மீது உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985ன்படியும், அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955ன்படியும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் தரேஸ்அகமது எச்சரித்துள்ளார்.கிணற்றில் குதித்து பெண் தற்கொலைமணப்பாறை, : மணப்பாறை அருகே உள்ள தீராம்பட்டியை சேர்ந்தவர் சார்லஸ். இவருக்கு சொந்தமான விவசாய கிணறு பூமாலைபட்டியில் உள்ளது. இந்த கிணற்றில் நேற்று மாலை அடையாளம் தெரியாத 50வயது மதிக்கத்தக்க பெண் பிணம் மிதந்தது. இதைப்பார்த்த அப்பகுதி மக்கள் மணப்பாறை போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் வந்து பார்த்த போது, கிணற்றின் அருகே ஒரு பையில் 5 புடவைகள் மற்றும் அவரது செருப்புகள் இருந்தது. மேலும் அருகில் இருந்த பம்பு செட் சுவரில் 2 போன் நம்பர்கள் பச்சை நிறத்தில் எழுதப்பட்டிருந்தது.

போலீசார் அதில் ஒரு எண்ணை தொடர்பு கொண்டு விசாரித்த போது, எதிர்முனையில் பேசியவர் பெரம்பலூர் மாவட்டம் அய்யலூர் பெருமாள் கோயில் தெருவை சேர்ந்த வாசுதேவன் என்பது தெரியவந்தது. விசாரணையில், வாசுதேவன் லாரி உரிமையாளர் என்பதும், கிணற்றில் பிணமாக மிதந்தவர் வாசுதேவனின் மனைவி அஜந்தா (48) என்பதும் தெரியவந்தது. நேற்றுமுன்தினம் வீட்டில் கணவருடன் ஏற்பட்ட தகராறில் கோபித்துக்கொண்டு சென்றவர், இங்கு வந்து கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டதும் தெரியவந்தது. அஜந்தாவுக்கு ஜீவன்(24), ரஞ்சித் (22) ஆகிய 2 மகன்கள் உள்ளனர். பின்னர்

மணப்பாறை தீயணைப்பு வீரர்கள் வந்து சடலத்தை கைப்பற்றி மணப்பாறை அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து இன்ஸ்பெக்டர் தினேஸ்குமார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

**அரவக்குறிச்சியில் அடை மழை**

அரவக்குறிச்சி, : அக்னி நட்சத்திரம் துவங்கியதை அடுத்து அரவக்குறிச்சி பகுதியில் அனல் காற்றுடன் வெயில் வாட்டி வதைக்கின்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் விடிய விடிய மழை பெய்தது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கரூர்: கரூரில் நேற்று காலை முதல் மாலை வரை அவ்வப்போது சாரல் மழை பெய்ததால் கரூர் குளிர்ச்சியாக காணப்பட்டது.

**ஐரோப்பாவில் இந்திய மாம்பழங்களுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்: நிர்மலா சீதாராமன்**

சென்னை, மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் திருவனந்தபுரத்தில் இருந்து நேற்று முன்தினம் இரவு சென்னை வந்தார். விமான நிலையத்தில் நிருபர்களிடம் அவர் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழகத்தில் தொழில் துறையை மேம்படுத்தி அபிவிருத்தி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. ஆனால் இதற்கு மாநில அரசின் ஒத்துழைப்பு தேவை. இதற்காக மாநில அரசிடம் பேசிக்கொண்டு இருக்கிறோம்.

சென்னை அருகே உள்ள ஸ்ரீபெரும்புதூரில் உள்ள 2 முக்கிய தொழிற்சாலைகள் மூடப்பட்டு உள்ளதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்த தொழிற்சாலைகளை மீண்டும் திறக்க

பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்கப்படும் என கூறி உள்ளார். விரைவில் இந்த தொழிற்சாலைகள் திறக்கப்படும்.

இந்திய மாம்பழங்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் தடை விதிக்கப்பட்டு இருந்தது. இதனால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டனர். ஐரோப்பிய நாடுகளுடன் மத்திய அரசு நடத்திய பேச்சுவார்த்தை மூலமாக மாம்பழங்களுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டு உள்ளது. அங்கு ஓரிரு காய்கறி ரகங்களுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. மத்திய அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது, விரைவில் இதற்கான தடையும் நீக்கப்படும்.நிலம் கையகப்படுத்தும் மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு உள்ளது. மேல்-சபையில் அடுத்த 3 தினங்களில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். விரிவான விவாதம் செய்யப்படும். இந்த மசோதாவிற்கு அனைவரும் ஆதரவு அளிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## கார்பைடு கல் மாம்பழங்கள் எச்சரிக்கை_: சுவை இருக்காது, உடலுக்கு தீங்கானது_

தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களுக்கு மாம்பழங்கள் வரத்து அதிகரித்துள்ளது. அதேநேரத்தில் கார்பைடு கல் மூலம் பழுக்க வைக்கப் படுவது குறித்த அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. ‘தடை செய்யப்பட்ட கார்பைடு கல் மூலம் மாம்பழங்களை பழுக்க வைக்க வேண்டாம்’ என, வியாபாரிகளுக்கு உணவு பாதுகாப்பு துறையினர் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

**சுண்டி இழுக்கும்**

மே மாதத்தில் மாம்பழம் சீசன் தொடங்கி விடும். கடைகளில் வகை வகையான மாம்பழங்கள் பார்வையாளர்களை சுண்டி இழுக்கும். முக்கனிகளில் ஒன்றான மாம்பழம் அனைவராலும் விரும்பி

சாப்பிடப்படும் பழ வகையாகும். எனவே, மாம்பழ வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும்.

அதேநேரத்தில் செயற்கை கல் மூலம் பழுக்க வைக்கப்படும் மாம்பழங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படுவது வாடிக்கையாகி வருகிறது. பல்லாயிரம் டன் மாம்பழங்கள் பறிமுதல் செய்யப்பட்டு ஆண்டுதோறும் அழிக்கப்படுகின்றன.



▲ திருநெல்வேலியில் விற்பனைக்கு வைத்திருந்த மாம்பழங்கள். படம்: மு.லெட்சுமி அருண்

**வரத்து அதிகரிப்பு**

தற்போது சீசன் தொடங்கியுள்ளதால் கடந்த சில தினங்களாக தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களுக்கு மாம்பழங்கள் வரத்து அதிகரித்துள்ளது. அனைத்து பழக்கடைகளிலும் வகை, வகையான மாம்பழங்கள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ளன. மக்களும் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். அதேநேரத்தில் கார்பைடு கல்

மூலம் மாம்பழங்கள் பழுக்கவைக்கப்படுவது குறித்த அச்சமும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

**நிறத்தை மாற்றும் கல்**

வெல்டிங் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் கால்சியம் கார்பைடு என்ற கல்லை சிறு துண்டுகளாக உடைத்து காகிதங்களில் சுற்றி மாங்காய்களுக்கு நடுவே வைத்துவிடுவார்கள். அடுத்த 3 முதல் 6 மணி நேரத்தில் மாங்காய்கள் அனைத்தும் பழுத்து மஞ்சள் நிறமாக மாறிவிடும். இதுதான் செயற்கை கல் மூலம் பழுக்க வைக்கும் முறை. இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தின் படி இது தடை செய்யப்பட்ட முறை. இந்த கால்சியம் கார்பைடில் இருந்து அசட்டலின் என்ற வாயு வெளியாகி மாம்பழத்தை பழுக்க வைக்கிறது. அதாவது மாம்பழத்தின் நிறத்தை அது மாற்றும். தன்மையை கெடுத்துவிடும்.

கால்சியம் கார்பைடு கல் வைத்து பழுக்க வைக்கப்படும் மாம்பழங்கள் பார்க்க மட்டுமே பளிச்சிடும். ஆனால், சுவை இருக்காது. பழத்தில் இனிப்பு இருக்காது. அதுமட்டுமின்றி உடல் நலத்திற்கும் பல்வேறு தீங்குகளை ஏற்படுத்தும் என்கிறார், உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்ட மாவட்ட நியமன அலுவலர் எம். ஜெகதீஷ் சந்திரபோஸ்.

**புற்றுநோய் அபாயம்**

அவர் மேலும் கூறும்போது, ‘கால்சியம் கார்பைடு கல்லில் இருந்து வெளியாகும் அசட்டலின் வாயு மாம்பழத்திற்குள் ஊடுருவி சென்றுவிடுகிறது. இந்த மாம்பழத்தை சாப்பிட்டால் பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படும்.உடனடியாக வயிற்று வலி உண்டாகும். தொடர்ந்து வாந்தி, மயக்கம், வயிற்றுப்புண் போன்றவை ஏற்படும். மேலும், வேதியியல் மாற்றங்களால் புற்றுநோய் ஏற்படும் அபாயமும் உள்ளது.மாமரத்தில் சுரக்கும் எத்திலின் என்ற ஹார்மோன் மூலம் தான் மாம்பழங்கள் மரத்தில் இயற்கையாக பழுக்கின்றன. எனவே, அதே எத்திலின் திரவத்தை மாங்காய்களில் தெளித்து அவைகளை செயற்கையாக பழுக்க வைக்கலாம். இந்த முறை உடல் நலத்திற்கு கேடு விளைவிக்காது. இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தின் படி இது அனுமதிக்கப்பட்ட முறைதான்.

ரசாயன கடைகளில் எத்தரால் என்ற திரவம் கிடைக்கிறது. இந்த திரவத்தின் விலை அதிகம் கிடையாது. 1 லிட்டர் தண்ணீருக்கு 1 மி.லி. எத்தரால் திரவத்தை கலந்து அதனை மாங்காய்கள் மீது தெளித்து, அறையில் வைத்து பூட்டி வைத்தால் போதும். அதில் இருந்து எத்தலின் வாயு வெளியேறி மாம்பழங்களை இயற்கையான முறையில் பழுக்க வைத்துவிடும். ஆனால், இந்த முறையில் மாம்பழங்கள் பழுக்க 24 மணி நேரம் முதல் 48 மணி நேரம் வரை ஆகும். இந்த முறையில் மாங்காய்களின் நிறம் மாறுவதுடன், சுவையும் அப்படியே இருக்கும். உடல் நலத்திற்கு எந்த தீங்கையும் விளைவிக்காது.

**எளிதில் கண்டுபிடிக்கலாம்**

ஆனால், கார்பைடு கல் வைத்தால் 6 மணி நேரத்தில் பழுத்துவிடும். விரைவாக பழுக்க வைத்து விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் வியாபாரிகள் சிலர் கார்பைடு கல் வைத்து பழுக்க வைக்கின்றனர். வாங்கும் மக்களின் உடல் நலத்தை பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை.கார்பைடு கல் மூலம் பழுக்க வைத்த மாம்பழங்களை மக்கள் எளிதில் கண்டுபிடித்துவிடலாம். மாம்பழங்களின் மீது பெரிய அளவில் கறுப்பு புள்ளிகள் இருக்கும். மாம்பழங்களை தொட்டு பார்த்தால் சூடாக இருக்கும். தோல் மட்டும் பழுத்தது போல மஞ்சளாக இருக்கும். உள்ளே வெட்டி பார்த்தால் பழுத்திருக்காது, சுவையும் இருக்காது. மேலும், கார்பைடு கல் மூலம் பழுக்க வைத்த மாம்பழங்கள் 2 நாட்களில் கெட்டு போய்விடும்.

**திடீர் சோதனை**

இதுதொடர்பாக வியாபாரிகளிடம் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். கார்பைடு கல் மூலம் பழுக்க வைக்கப்படும் மாம்பழங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படும். எத்திலின் மூலம் பழுக்க வைத்தால் எந்த பிரச்சினையும் இல்லை என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறி வருகிறோம். அனைத்து பழ குடோன்களிலும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் திடீர் சோதனை நடத்தி வருகின்றனர்' என்றார்.___